EASTERN UNIVERSITY, SRI LANKA
10 JUN 2013

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
கலை கலாசார பீடம்
இரண்டாம் வருட முதலாம் அரையாண்டு பொது/சிறப்பு
கலைமாணித்தேர்வு 2010/2011 (ஜனவரி/பெப்ரவரி) 2013

# OCC – 2101 Society and Culture in Sri Lanka

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி 1ல் யாதேனும் மூன்று வினாக்களுக்கும், பகுதி 2ல் யாதேனும் ஒரு வினாவுக்குமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி – 1

01.அ. 'பண்பாடு' எனும் எண்ணக்கருவினைச் சமூகவியல் ரீதியாக வரையறுக்குக.
10 புள்ளிகள்

ஆ. வரலாற்றுக்கு முற்பட்டகாலம் (Pre historic world) முதல், தற்காலம் வரையிலும் மனிதப் பண்பாடு (Human Culture) பரிணாமம் உற்றுள்ள வளர்ச்சி நிலைகளை எடுத்துக்காட்டுக.
15 புள்ளிகள்

02.அ. இலங்கையின் வரலாற்றுத் துறைக்குப் பங்களிப்புச் செய்துள்ள அறிஞர்களையும், அவர்களின் பிரதான சிந்தனை முன்வைப்புக் களையும் குறிப்பிடுக.
10 புள்ளிகள்

ஆ. நடுநிலையான வரலாற்று எழுத்தியல் மரபு ஒன்றின் சமகாலத் தேவையையும், இம்முயற்சியானது இலங்கைச் சூழலில் எதிர்கொள்ள நேரிடும் சவால்களையும் எடுத்துவிளக்குக.
15 புள்ளிகள்

03.அ. இலங்கைச் சமூகத்திற்கே உரித்தான சிறப்பான பண்புகளைத் தெளிவுபடுத்துக.
10 புள்ளிகள்

ஆ. சமூகக் கட்டமைப்புத் (Social Stucture) தொடர்பான லெவி ஸ்ராசின் (Levi Strauss) சிந்தனைகளைத் தொகுத்து வரைக.
15 புள்ளிகள்

04.அ. புவியியல் மற்றும் பண்பாட்டுத் தொடர்புகளினால் இந்தியச் சமூகப் பண்பாட்டு நிலைமை, இலங்கைச் சமூகக் கட்டமைப்பை எவ்விதம் பாதித்துள்ளது? விளக்குக.
10 புள்ளிகள்

ஆ. மட்டக்களப்பு வரலாற்றை நாம் அறிந்துகொள்ள உதவும் புலமைத்துவம் சார்ந்த படைப்புக்களையும், அவற்றின் செய்திகளையும் தொகுத்து எழுதுக.

15 புள்ளிகள்

## பகுதி – 11

01. "நிலைபேறானதும், மானிடப் பெறுமதி வாய்ந்ததுமான சமூக இருப்புக்குப் பண்பாட்டுத்துறையின் பங்கு அத்தியாவசியமானது" இக்கூற்றின் நியாயப்பாட்டினைத் தக்க எடுத்துக்காட்டுக்களுடன் நிரூபணம் செய்க.

25 புள்ளிகள்

02. இலங்கையின் சாதிக்கட்டமைப்புத் தொடர்பில் பகுப்பாய்வு செய்து சமகாலச் சமூக மாற்றங்களின் மத்தியில் இலங்கைச் சமூகக் கட்டமைப்பிலும், பண்பாட்டிலும் சாதியம் வகிக்கும் இடத்தினைத் தெளிவுபடுத்துக.

25 புள்ளிகள்